**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள். 30.06.2021**

**2021**ம் ஆண்டு ஜீன் மாதம் **30.06.2021**ம் தேதி புதன்கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் **2021**ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். **1103**/2020/சி**1)**
**தீர்மான எண் : 107** பதிவு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**2)** இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஜீன் **2021**ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். **1103**/2020/சி**1)**
**தீர்மான எண் : 108** பதிவு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**3)** இந்நகராட்சியில் மைய கணினி இணைவழி மென்பொருள் (Urban Tree information System) சர்வரின் கீழ் இணைக்கப்பட்டு அலுவலக வரி வசூல் மையம் மற்றும் அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும் VPN மற்றும் LAN நெட்வொர்க் முறையில் கணினி இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவற்றின் பயன்பாட்டிற்கு பயன்படுத்திப்படும் கணினிகள் **15** எண்ணம் மற்றும் Dotmatrix Printer 4 எண்ணம் இவற்றை ஆண்டு பராமரிப்பின் (Without Material) கீழ் கொண்டு வரும்பொழுது உபகரணங்களில் ஏற்படும் பழுதுகள் மட்டும் சரிசெய்யப்படும், பழுது சரிசெய்ய முடியாத உபகரணங்களை புதிதாக மாற்றம் செய்யும் பொழுது அதற்கான தொகையினை மட்டும் அவ்வப்போது இந்நகராட்சி செலுத்தி பழுதுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பராமரிப்பின் கீழ் கொண்டு வரும்பொழுது, பழுது உபகரணங்களை உடனுக்குடன் மாற்றி அலுவலகப்பணி பாதிக்காதவண்ணம் மேற்கொள்ள இயலும்.

எனவே, கணினி உபகரணங்களை ஆண்டு பராமரிப்பு (AMC-Annual Maintanence Contract Without Material) முறையில் வருடாந்திர பணியை மேற்கொள்ள மேலும் பராமரிப்பு காலமான **04.05.2021** முதல் **03.05.2020** வரை நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**60,000/-**ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.**மேலும் ஓராண்டு பராமரிப்பு பணியினை மொர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.382/2020/இ1)**
**தீர்மான எண் : 109** அனுமதி அளிக்கப்படுகிறது

4) இந்நகராட்சி பொறியியல்பிரிவில் இயங்கி வரும் ஜெட்ராடிங் வாகன எண் TN60 AX 9925 வாகனத்தின் தகுதி சான்று (FC) முடிவடைந்து விட்டதால் மேற்காணும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி தகுதிச்சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ஐ 2021–2022 நகராட்சி குடிநீர்வடிகால்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 68/2021/இ1**
**தீர்மான எண் : 110** அனுமதி அளிக்கப்படுகிறது

5) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கலப்பதற்கு தேவையான குளோரின் சிலிண்டர் ஓராண்டு உபயோகத்திற்கு வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.2032/2021/இ1)**

6) போடிநாயக்கனூர் நகராட்சி உள்ளூர் திட்ட குழுமம் ஒப்புதல் வழங்கப்பட்ட குசவபாளையம் விரிவு அபிவிருத்தி திட்ட சாலையினை அமைக்கக் கோரி திரு.கே.எஸ்.ராமராஜ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.32318/2006 தொடரப்பட்டு, மேற்படி வழக்கானது 07.06.2018 ஆம் தேதி முடிவுற்றது. மேற்படி வழக்கின் தீர்ப்பில் இந்நகராட்சி மூலம் மேற்படி திட்ட சாலையான A1A1– 60 அடி திட்ட சாலையினையும், B1B1–40 திட்ட சாலையினையும் அமைக்க தீர்ப்பாணையில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற உத்தரவின்படி அமைக்க நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் திட்ட சாலையினை அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது என தெரிவித்து , வழக்கு தொடரப்பட்ட திரு.கே.எஸ்.ராமராஜ் என்பவருக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.5652/1992/எப்1 நாள்.02.01.2019–ல் கடிதம் அனுப்பப்பட்டது.

திரு.கே.எஸ்.ராமராஜ் என்பவர் மேற்படி வழக்கின் உத்தரவுப்படி மேற்படி திட்ட சாலையான A1A1– 60 அடி திட்ட சாலையினையும், B1B1–40 திட்ட சாலையினையும் அமைக்கவில்லை என மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Cont.Pet.No.640/2019) தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி.பி.இராஜலட்சுமி என்பவருக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் (10.01.2020 மற்றும் 31.01.2020) ஒவ்வொரு முறை ஆஜராக வாதுரை கட்டணம் ரூ.15,000/– வீதம் 2 முறை ஆஜரானதிற்கு ரூ.30,000/–ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திருமதி.பி.இராஜலட்சுமி வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2021–2022 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2.வழக்கின் அவசர அவசியத்தினை கருதி ,மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று, சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி.பி.இராஜலட்சுமி என்பவருக்கு வாதுரை கட்டணமாக ரூ.30,000/–ஐ வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.5652/1992/எப்2)**
**தீர்மான எண் : 111** அனுமதி அளிக்கப்படுகிறது

7) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் PH ரோடு (Z.K.M பள்ளி முதல்) திருமலாபுரம் சாலை காளியம்மன் கோவில் வரை உள்ள சாக்கடை கால்வாய் சர்ச் தெரு முதல் கீழவெளி வீதி பெரியகுளம் ரோடு வரை உள்ள பெரிய சாக்கடை கால்வாய்களை நகராட்சி JCB மூலம் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யது வெளியேற்றப்படும் சாக்கடை கழிவுகளை டிராக்டர் மூலம் சுத்தம் செய்யும் பணிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/—னை செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்ற தீர்மான எண்.80 நாள்.24.02.2021ம் தேதி அங்கிகரிக்கப்பட்ட வாடகை விகிதத்தில் SST டிரேடர்ஸ் போடி நிறுவனத்திற்க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியாமைக்கும் அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.594/2021/எச்2**

**தீர்மான எண் : 112** அனுமதி அளிக்கப்படுகிறது

.

8) இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் 146 தவிர அரசாணை எண் 101 ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின்படி 270 பணியிடங்கள் தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.267. நாள்.30.06.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.16096/பி3/2016. நாள்.27.06.2016ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு 01.09.2018 முதல் 31.08.2019 முடிய ஒராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் 31.08.2019 உடன் முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.501. நாள்.30.08.2019ல் பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தனியார்மயம் மூலம் பணியமர்த்தி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் 01.09.2019 முதல் 29.02.2020 வரையிலான ஆறு மாத காலத்திற்கு 54 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 16.09.2019 மற்றும் 17.12.2019 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.03.2020 முதல் 30.04.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீடித்தும், பின்பு 01.05.2020 முதல் 31.07.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்து , பின்பு 01.08.2020 முதல் 31.10.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்தும்,பின்பு 01.02.2021 முதல் 28.02.2021 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டித்தும், பின்பு 01.03.2021 முதல் 31.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.06.2021 முதல் 31.08.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கியமைக்கும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.27.00/—லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.3777 /2019/எச்1**

**தீர்மான எண் : 113** அனுமதி அளிக்கப்படுகிறது

9) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு,கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளுக்காக 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு சட்டம் விதி 53 (1) (2) மற்றும் (3)ன் படி தேவைக்கேற்ப கொசுப்புழு ஒழிப்பிற்கு தற்காலிக மஸ்தூர்கள் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1819/2016/L3 , நாள். 08.11.2016ம் தேதிய கடிதத்தில் தற்காலிக மஸ்தூர் பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ள தெரிவித்ததற்கிணங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 60 தற்காலிக பணியாளர்களை அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை. நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களின் பணி ஒப்பந்தகாலம் ஜுலை 2020 உடன் முடிவடைவதாலும், தற்போது கொரோனா வைரஸ் அதிகளவில் பரவி இந்தியா முழுவதும் 144 தடை உத்திரவு பிறப்பித்துள்ளதாலும் பொதுச்சுகாதரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2020–2021 ம் ஆண்டு தினக்கூலி மஸ்தூர் பணியாளர்களின் ஊதிய விகித அடிப்படையில் 01.06.2021 முதல் 31.08.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீடித்து வழங்கியமைக்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.18.50/– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் 6709/2013/எச்2)**

**தீர்மான எண் : 114** அனுமதி அளிக்கப்படுகிறது

10) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் , பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பீளிச்சிங் பவுடர் கையிருப்பு குறைந்த அளவே கையிருப்பு உள்ளதாலும் ,கொரோனா தாக்கம் அதிகரித்து வருவதாலும்,கொரோனா பாதித்த வீடுகள்,தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் , பீளிச்சிங் பவுடர் –13டன் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 /– இலட்சத்தினை செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1658/2021/எச்1)**

**தீர்மான எண் : 115** அனுமதி அளிக்கப்படுகிறது

11) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் , பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பீளிச்சிங் பவுடர் 13டன் விநியோகம் செய்ய 27.05.2021 ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜேன்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|
| 1 | பீளிச்சிங் பவுடர் கிலோ ஒன்றின் விலை +GST | ரூ.76.7/– ( ரூ.65/-+(GST-18%)) | ரூ.79.03/– (ரூ.67/-+(GST-18%)) |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் , பழைய வத்தலகுண்டு நிறுவனத்திற்கு பொது சுகாதார ,அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1658/2021/எச்1)**

**தீர்மான எண் : 116** அனுமதி அளிக்கப்படுகிறது

12) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் கையிருப்பு குறைந்த அளவே கையிருப்பு உள்ளதாலும், கொரோனா தாக்கம் அதிகரித்து வருவதாலும், கொரோனா பாதித்த வீடுகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், நீர்த்த சுண்ணாம்புத்தூள் 75 டன் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00/– இலட்சத்தினை செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1659/2021/எச்1)**
**தீர்மான எண் : 117** அனுமதி அளிக்கப்படுகிறது

13) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் 75 டன் விநியோகம் செய்ய 28.05.2021 ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்திதின பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜென்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் கிலோ ஒன்றின் விலை + GST | ரூ.12.6/– (ரூ.12/– + (GST-5%) | ரூ.13.65/– (ரூ.13/– + (GST-5%) |

**அலுவலகக்குறிப்பு :–**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ், பழைய வத்தலகுண்டு நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1659/2021/எச்1)**
**தீர்மான எண் : 118** அனுமதி அளிக்கப்படுகிறது

14) தென்மேற்கு பருவமழை தொடங்க இருப்பதாலும் , போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட P.H ரோடு பகுதியிலுள்ள கழிவு நீர் செல்லும் கால்வாய் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் செல்லும் சூழ்நிலையில் உள்ளது , கழிவுநீர் செல்லும் கால்வாயினை கழிவுநீர் தேக்க பணியை மனித சக்தி மூலம் சரி செய்ய இயலாத வகையிலும் ,JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்த முடியாத வகையில் உள்ளதாலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி P.H ரோடு பகுதியிலுள்ள கழிவு நீர் கால்வாயினை Chain Dozzer இயந்திரம் மூலம் தூர்வாரவும் ,தூர்வாரப்படும் சாக்கடை கழிவுகளை உடனடியாக வாடகை டிராக்டர் மூலம் அப்புறப்படுத்தவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1807/2021/எச்1)**
**தீர்மான எண் : 119** அனுமதி அளிக்கப்படுகிறது

15) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா தொற்று தொடர்ந்து பரவி வருவதாலும் கொரோனா கட்டுப்படுத்துவதற்கு தேவையான லைசால் இருப்பு குறைவாக இருப்பதாலும் லைசால் 2000லிட்டர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/–னை செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1686/2021/எச்1)**
**தீர்மான எண் : 120** அனுமதி அளிக்கப்படுகிறது

16) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா தொற்று தொடர்ந்து பரவி வருவதாலும் கொரோனா கட்டுப்படுத்துவதற்கு தேவையான லைசால் கைஇருப்பு இல்லாததாலும் லைசால் 2000 லிட்டர் விநியோகம் செய்ய 27.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், பொள்ளாச்சி | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் அய்யம்பாளையம் |
|---|---|---|---|
| 1 | லைசால் லிட்டர் ஒன்றின் விலை | ரூ.174/– | ரூ.280/– |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், பொள்ளாச்சி நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1686/2021/எச்1)**
***தீர்மான எண் : 121*** அனுமதி அளிக்கப்படுகிறது

17) இந்நகராட்சி P.H ரோடு பகுதியிலுள்ள கழிவு நீர் கால்வாயினை Chain Dozzer இயந்திரம் மூலம் தூர்வாரவும் ,தூர்வாரப்படும் சாக்கடை கழிவுகளை உடனடியாக வாடகை டிராக்டர் மூலம் அப்புறப்படுத்த 27.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து ஆணையாளரின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி கோரிய பணி | P.சௌந்தரராஜன் போடி | A.S.R.Earth Movers, Bodi | J.J.Earth Movers, Bodi |
|---|---|---|---|---|
| 1 | P.H ரோடு பகுதியிலுள்ள கழிவு நீர் கால்வாயினை Chain Dozzer இயந்திரம் மூலம் தூர்வாரவும் ,தூர்வாரப்படும் சாக்கடை கழிவுகளை உடனடியாக வாடகை டிராக்டர் மூலம் அப்புறப்படுத்தும் பணி | Chain Dozzer ஒரு மணி நேரத்திற்கு ரூ.1400/– டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.2600/– | Chain Dozzer ஒரு மணி நேரத்திற்கு ரூ.1500/– டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.3000/– | Chain Dozzer ஒரு மணி நேரத்திற்கு ரூ.1450/– டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.2800/– |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ரு.சௌந்தரராஜன், போடிநாயக்கனூர் அவர்களுக்கு பொது சுகாதார ,அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1807/2021/எச்1)**
***தீர்மான எண் : 122*** அனுமதி அளிக்கப்படுகிறது

**18)** இந்நகராட்சிக்கு சொந்தமான காமராரார் கடை வீதி வணிக வளாக கடை எண். (வரி விதிப்பு எண்.120/1210) திரு.S.சந்திரசேகரன் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட கடையில் திரு.S.சந்திரசேகரன், த/பெ.K.சுப்பையா மற்றும் திரு. R.சங்கரேஸ்வரன், த/பெ. M.ராமசந்திரன் இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு. S.சந்திரசேகரன் என்பவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வெளியூர் செல்வதால் உறுதிமொழி சம்மதப் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு R.சங்கரேஸ்வரன், த/பெ.M.ராமசந்திரன் என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :—</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி காமராஜர் கடை வீதி வணிக வளாக கடை எண்.5 (வரி விதிப்பு எண்.120/1210) திரு. S.சந்திரசேகரன், த/பெ. K.சுப்பையா என்பவர் பெயரிலிருந்து திரு. R.சங்கரேஸ்வரன், த/பெ.M.ராமசந்திரன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட முன் அனுமதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் பெற்று பெயர் மாற்றம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.448/2021/அ2)**

**தீர்மான எண் : 123** அனுமதி அளிக்கப்படுகிறது

**19)**அரசாணை(2D) எண்—62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை(J1) நாள்.**11.10.2017**ன் படி இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணியமர்த்தப்படும் தூய்மை பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படவில்லை என இணைஆணையர், திண்டுக்கல் அவர்களால் தொடரப்பட்ட வழக்குற்கு (MWIA 01/2020,21/2019) , 23.02.2021, திண்டுக்கல் குறைந்தபட்ச கூலிச்சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற ஆணையரது நீதிமன்றத்தில் எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்கும், ஆஜராகியமைக்கும், திரு.B.R.பாலமுரளி ,அரசு வழக்கறிஞர்,போடி அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.**10,000/—** வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.0456/2021/எச்1).**

**தீர்மான எண் : 124** அனுமதி அளிக்கப்படுகிறது

20) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண். TN-60 AW–0522–ன் தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் பழுதுப் பணிகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து 17.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் , பெரியகுளம். | KMA மோட்டார்ஸ், திண்டுக்கல் | ஸ்ரீ பாலாஜி மொபைல்ஸ், மதுரை |
|---|---|---|---|---|
| 1 | கூடுதல் கட்லீப் பொருத்தல் | ரூ.6400/- | ரூ.8300/– | ரூ.7600/– |
| 2 | இழுக்கும் திறன் குறைவாக உள்ளது | ரூ5700/- | ரூ.9500/– | ரூ.8300/– |
| 3 | ஆயில் சர்விஸ் பார்கக | ரூ.7100/- | ரூ.9100/– | ரூ.8600/– |
| 4 | வாகனம் முழுவதும் பெயிண்ட் அடிக்க | ரூ.8000/- | ரூ.11500/– | ரூ.10500/– |
| 5 | நான்கு வீல்களிலும் கிரீஸ் பேக் பண்ண | ரூ.6000/- | ரூ.11000/– | ரூ.9000/– |
| 6 | பிரேக் செக்கப் பார்க்க | ரூ.2100/- | ரூ.5200/– | ரூ.4000/– |
| 7 | டிங்கர் ஒர்க் பார்க்க | ரூ.7000/- | ரூ.10500/– | ரூ.9000/– |
| 8 | வேக கட்டுபாடு கருவி பொருத்த | ரூ.7800/- | ரூ.9600/– | ரூ.9000/– |
| 9 | நான்கு டயர் புதியது மாற்ற | ரூ.12800/– | ரூ.14500/– | ரூ.14000/– |
| மொத்தம் | | ரூ.62900/– +GST-11322/- | ரூ.89200/– | ரூ.80000/– |
| நிகர மொத்தம் | | **ரூ.74,222/–** | **ரூ.89,200/–** | **ரூ.80,000/–** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய PANDIAN AUTO MOBILES, பெரியகுளம், நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6015/2021/எச்2)**
**தீர்மான எண் : 125** அனுமதி அளிக்கப்படுகிறது

**21)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண்.TN-60 AW-6019–ன் தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் பழுதுப் பணிகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து **17.05.2021**ம் தேதி விலைப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் , பெரியகுளம். | KMA மோட்டார்ஸ், திண்டுக்கல் | ஸ்ரீ பாலாஜி மொபைல்ஸ், மதுரை |
|---|---|---|---|---|
| 1 | கம்ளிட் டிங்கரிங் வேலை | ரூ.7000/- | ரூ.10500/– | ரூ.9000/– |
| 2 | ஆயில் சர்வீஸ் | ரூ7100/- | ரூ.9500/– | ரூ.8500/– |
| 3 | கூதல் ஸ்பிரிங் பிளேட் | ரூ.6400/- | ரூ.11000/– | ரூ.9000/– |
| 4 | பெயிண்ட்டிங் வேலை | ரூ.8000/- | ரூ.13000/– | ரூ.11000/– |
| 5 | டைனமோ செல்ப்மோட்டர் எலக்ட்ரிக் ஒர்க் | ரூ.5400/- | ரூ.8000/– | ரூ.7000/– |
| 6 | நான்கு வீல்களிலும் கிரீஸ் பேக் பண்ண | ரூ.6000/- | ரூ.9000/– | ரூ.8000/– |
| 7 | வேக கட்டுபாடு கருவி பொருத்த வேண்டும் | ரூ.7800/- | ரூ.9800/– | ரூ.9400/– |
| 8 | பேட்டரி புதிதாக பொருத்த வேண்டும் | ரூ.5600/- | ரூ.7300/– | ரூ.6500/– |
| மொத்தம் | | ரூ.53300/– +GST-9594/- | ரூ.77800/– | ரூ.68400/– |
| நிகர மொத்தம் | | **ரூ.62,894/–** | **ரூ.77,800/–** | **ரூ.68,400/–** |

**அலுவலகக்குறிப்பு:** மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய PANDIAN AUTO MOBILES, பெரியகுளம், நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6014/2021/எச்2

**தீர்மான எண் : 126** அனுமதி அளிக்கப்படுகிறது

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.